# குடும்பங்களுக்கான ஆதரவுத் தொகுப்புத்திட்டம்



நிச்சயமற்ற பொருளியல் சூழல் நிரம்பிய இந்தக் காலகட்டத்தில் குடும்பங்களுக்குக் கூடுதல் ஆதரவு வழங்க **$900 மில்லியன்**



## பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு – ரொக்கம் (சிறப்புத் தொகை)

- பொருள், சேவை வரிப் **பற்றுச்சீட்டுக்குத்** (ரொக்கம்) தகுதிபெறும் குறைந்த வருமானம் பெறும் சிங்கப்பூரர்கள் ஒவ்வொருவரும், ஜூன் 2021-இல் **கூடுதலாக $200 சிறப்புத் தொகை** பெறுவார்கள்



## பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு – யு-சேவ் (சிறப்புத் தொகை)

- தகுதிபெறும் வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீடுகள் அனைத்தும், ஓராண்டுக்கு **வழக்கமான பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டுடன் (யு-சேவ்) கூடுதலாக 50% தொகையை,** அல்லது ஏப்ரல் 2021-இலும், ஜூலை 2021-இலும் $120 முதல் $200 வரையிலான பொதுப் பயனீட்டுக் கட்டணத் தள்ளுபடிகளைப் பெறுவார்கள்



## சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி

- வீவக வீடுகளில் வசிக்கும் தகுதிபெறும் சிங்கப்பூர் குடும்பங்கள், ஓராண்டு காலத்தில் **1.5 முதல் 3.5 மாதத்திற்கு இடைப்பட்ட** சேவை, பராமரிப்புக் கட்டணத் **தள்ளுபடிகளைப்** பெறுவார்கள். இந்தத் தள்ளுபடிகள் ஏப்ரல் 2021, ஜூலை 2021, அக்டோபர் 2021, ஜனவரி 2022 ஆகிய மாதங்களில் வழங்கப்படும்



## பிள்ளை மேம்பாட்டுக் கணக்கு, எடுசேவ் கல்விச் சேமிப்புக் கணக்கு, உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கல்விக்கான கணக்கு ஆகியவற்றுக்கான நிரப்புத்தொகை

- 2021-இல், 21 வயதுக்குக் குறைவான சிங்கப்பூர் குடியுரிமை உடைய பிள்ளைகள், கூடுதலாக **ஒருமுறை மட்டுமே வழங்கப்படும் $200 நிரப்புத்தொகையைப்** பெறுவார்கள்
- எடுசேவ் கல்விச் சேமிப்புக் கணக்கிலும் உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கல்விக்கான கணக்கிலும் மே 2021-இல் நிரப்புத்தொகை போடப்படும்; பிள்ளை மேம்பாட்டுக் கணக்கில் செப்டம்பர் 2021-இல் நிரப்புத்தொகை போடப்படும்



## சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகள்

- ஒவ்வொரு சிங்கப்பூர் குடும்பத்திற்கும், பங்குபெறும் குடியிருப்பு வட்டாரக் கடைகளிலும் உணவங்காடி நிலையங்களிலும் பயன்படுத்தக்கூடிய **$100** பற்றுச்சீட்டுகள்

MOF MINISTRY OF FINANCE SINGAPORE gov.sg

மேலும் படிக்க go.gov.sg/hsp2021

BUDGET 2021

Version as of 16 Mar 2021